**March – 2008** **Reg. No. ..................................** **G-3040**

**Name : ......................................**

Part-III

# TAMIL

Maximum : 80 Scores

Time : $2\frac{1}{2}$ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to candidates :***

- There is a 'cool-off time' of 15 minutes in addition to the writing time of 2 ½ hrs.
- You are not allowed to write your answers nor to discuss anything with others during the 'cool-off time'.
- Use the 'cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- All questions are compulsory and only internal choice is allowed.
- When you select a question, all the sub-questions must be answered from the same question itself.

**നിർദ്ദേശങ്ങൾ :**

- നിർദ്ദിഷ്ട മയത്തിന് പുറമെ 15 മിനിറ്റ് 'കൂൾ ഓഫ് ടൈം' ഉണ്ടായിരിക്കും. ഈ - മയത്ത് ചോദ്യങ്ങൾക്ക് ഉത്തരം എഴുതാനോ, മറ്റുള്ളവരുമായി ആശയ വിനിമയം നടത്താനോ പാടില്ല.
- ഉത്തരങ്ങൾ എഴുതുന്നതിന് മുമ്പ് ചോദ്യങ്ങൾ ശ്രദ്ധാപൂർവ്വം വായിക്കണം.
- എല്ലാ ചോദ്യങ്ങൾക്കും ഉത്തരം എഴുതണം.
- ഒരു ചോദ്യനമ്പർ ഉത്തരമെഴുതാൻ തെരഞ്ഞെടുത്തു കഴിഞ്ഞാൽ ഉപചോദ്യങ്ങളും അതേ ചോദ്യ നമ്പരിൽ നിന്ന് തന്നെ തെരഞ്ഞെടുക്കേണ്ടതാണ്.

- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.*
- *ஒவ்வொரு வினாவுடன் தொடர்புடைய குறிப்புரைகளைப் படித்துப் புரிந்து கொண்ட பின்னரே எழுத வேண்டும்.*
- *ஒவ்வொரு வினாவுக்குமுரிய மதிப்பெண் அந்தந்த வினாவுக்கு நேர் எதிரே கொடுக்கப்பட்டுள்ளது.*

1. தொன்மைத் தமிழக வரலாற்றை அறிவதற்கான சான்றுகளைத் தொகுக்க உதவும் சான்றாதாரங்களைப் பின்வரும் குறிப்புகளின் வழி கண்டு கூறுக.

- கல்வெட்டுகள் முதலான தொல்பொருள் சான்றுகள்
- வெளிநாட்டார் குறிப்புகள்
- இலக்கியச் சான்றுகள் **8**

2. 'சங்க காலம் தமிழக வரலாற்றின் பொற்காலம்' என்பது குறித்து பள்ளி விழாவில் உரையாற்றக் குறிப்பு தயார் செய்க. **4**

3. 'மகேந்திர வர்மப் பல்லவன் கலைகளில் வல்லவன்' என்பதனை நிறுவிச் 'செந்தமிழ்' எனும் இதழுக்கு ஒரு கட்டுரை தயாரித்து அனுப்புக.

- இசை வல்லுநன்
- நாடக ஆசிரியன்
- கலைகளின் காவலன் **8**

4. தஞ்சைப் பெரியகோவிலையும், சோழர் காலச் சிற்பக் கலையையும் கண்டு வந்தபின் அதுகுறித்துத் தங்கைக்கு ஒரு கடிதம் எழுது.

- சுந்தர சோழனின் மகன் இராசராசன்
- தட்சிணமேரு விடங்கர் (சிவன்) கோவில்
- மாடக் கோவில்கள், சிற்பங்கள்
- கோவில்களே சமுதாயப் பின்னணி
- கோவில் கல்வெட்டுகள் ; நடராசர் சிலை **8**

5. 'மேலை நாட்டார் வருகையின் பின் தமிழகத்தில் கலை வளர்ச்சி மிகுந்தது' எனும் தலைப்பில் ஓர் உரை தயாரிக்க. (கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தவும்)

- சென்னை போன்ற தலைநகரங்களில் பல்கலைக்கழகங்கள் உருவாகின.
- ஆங்கிலக்கல்வி
- கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன
- சமய இலக்கியங்கள் ; தல புராணங்கள்
- உரைநடை இலக்கியம் வளர்ந்தது **8.**

6. முச்சங்கங்கள் குறித்துப் பள்ளி மலருக்குச் சிறு கட்டுரை எழுதுக. 4

7. 'நாயக்கர் காலமும் தமிழிலக்கியங்களும்' என்ற தலைப்பில் கட்டுரை தயாரித்து, 'தொல்லியல்' எனும் இதழுக்கு அனுப்புக. 8

8. புதுக்கவிதைக்கு அடிப்படை மரபுக்கவிதையே எனும் கருத்தாடலுக்கு வரும் கவிஞர்களிடம் இது குறித்துப் பேட்டி காண வினாநிரல் தயாரிக்க. 4

9. 'கிறித்துவமும் தமிழும்' என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் உரையாற்றும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்துள்ளது. 'தமிழ் உரைநடை வளர்ச்சி' பற்றி கருத்தரங்கச் சொற்பொழிவு தயாராக்குக. 8

10. 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு' –
இத்திருக்குறளை அலகு பிரித்து சீர், தளை குறிப்பிடுக. 4

11. 'பெரியநட் டார்க்கும் பகைவர்க்கும் சென்று
திரிவின்றித் தீர்ந்தார் போல் சொல்லி அவருள்
ஒருவரோ டொன்றி ஒருப்படா தாரே
இருதலைக் கொள்ளி யென்பார்.'
- பாநயம் பாராட்டுக. 4

12. பின்வரும் தொடர்களில் அமைந்துள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

- ஊரில் அடமழை பெய்தது
- தேங்காய் எண்ணெ விலை அறுபதுரூபாய்
- அவன் சோம்பேரியாகச் சுற்றுகிறான்
- தலகாணி வைத்துப் படுத்தால் தூக்கம் வரும்
- அடுப்பில் வெந்நீர் கொதிக்கிறது
- இங்கு பழம் விற்கப்படும் 4

13. ‘மானத் தெத்திய மழவில் கொடியே

மாயருதே நீ மாயருதே

நீரத பாளிகள் தோளிலு யர்த்திய

நீலப்பீலி காவடியே’

இம்மலையாளக் கவிதையைத் தமிழில் மொழிபெயர்க்க. 4

14. ‘நவீனத்தகவல் தொடர்புத் தொழில் நுட்பங்கள்’ எனும் கருத்தரங்கில் கலந்து கொள்ள குறிப்புகள் தயார் செய்க. 4

---